சார்பு நீதிமன்றம், மேலூர்
MCOP No.4/2023

பெயர் : டாக்டர்.ஜெயபிரகாஷ்
தகப்பனார் பெயர் :சின்னதுரை
கணவர் பெயர் :
வயது :43
கிராமம் :
வட்டம் :
தொழில் :அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை, உதவி பேராசிரியர், முலை நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

02.06.2026

ம.சா.2 முதல் விசாரணை:

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியிடம் நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழ் காட்டப்பட்டு, அந்த மருத்துவ குழுவில் தானும் ஒரு உறுப்பினர் என்று சாட்சி குறிப்பிடுகிறார். மேலும் நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி ஒப்புகொள்கிறார். மேற்படி நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழில் திரு.கண்ணன் S/o.சுப்பையாஎன்பவரை நான் பரிசோதனை செய்தேன். அவருக்கு நரம்பியல் சம்பந்தப்பட்ட குறைபாடு இல்லை என்று நான் சான்று அளித்துள்ளேன். விபத்து நடந்தது 2020ம் ஆண்டு ஆகும். நான் திரு.கண்ணன் அவர்களை பரிசோதனை செய்தது 2025 ஆகும். 5 ஆண்டுகாலம் கழித்து அவருக்கு எவ்விதமான நரம்பியல் சம்பந்தப்பட்ட கோளாறும் என்னுடைய மருத்துவ பரிசோதனையில் இல்லை என்பதால் நரம்பியல் கோளாறு இல்லை என்று சான்றளித்துள்ளேன். 40% ஊனம் இருப்பதாக சான்றளிக்கப்பட்டதாக அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை மனநிலை மருத்துவவியல் மருத்துவர் சான்றளித்துள்ளார் என்று ஆவணம் காட்டப்பட்டது. சாட்சி அதை பார்வையிட்டு அது மனநலம் சம்பந்தப்பட்டது என்றும் ஊனம் சம்பந்தப்பட்டது அல்ல என்று சாட்சி அதை பார்வையிட்டு

கூறுகிறார். சாட்சி தாமாக முன்வந்து அசல் மருத்துவ ஆவணங்களை கண்ணன் அவர்கள் தன்னிடம் முன்வைக்கவில்லை என்றும் அதனால் தான் தன்னால் முழுமையாக ஊனத்தன்மையை பற்றி குறிப்பிடவில்லை என்று குறிப்பிடுகிறார். மேற்படி நரம்பியல் சம்பந்தப்பட்ட ஊனம் என்பது வேறு மனநலம் சம்பந்தப்பட்ட பாதிப்பு என்பது வேறு. பேச்சுவராமை, முகவாதம், கை,கால்வாதம், கண்பார்வை கோளாறு, ருசி மற்றும் வாசனை அற்றுபோவது, ஆகியவை எல்லாம் நரம்பியல் கோளாறு ஆகும். அவ்வாறு நான் பரிசோதனை செய்த கண்ணன் என்பவருக்கு ஏற்படவில்லை என்பதால் அவருக்கு நரம்பியல் தொடர்பான ஊனம் அல்ல என்று சான்றளித்துள்ளேன். மேற்படி மருத்துவரீதியான ஆவணங்கள் திரு.கண்ணன் அவர்கள் மீண்டும் எடுத்துவந்தாரேயானால் அவருக்கு மீண்டும் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்க இயலுமா என்றால் இயலும்.

குறுக்கு விசாரணை :

மருத்துவ குழுவினர் பொதுவாக 3 நிபுணர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். 07.05.2025 முதல் 09.05.2025 வரை நாங்கள் திரு.கண்ணன் அவர்களை பரிசோதனை செய்தோம். மேற்படி 3 தேதிகளில் கண்ணன் என்பவருக்கு முழுமையாக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அவருக்கு ஊனசதவீதம் முடிவு செய்யப்பட்டது. மேற்படி அரசு ராசாசி மருத்துவமனை, மதுரை மனநல சிகிச்சை பிரிவில் கருத்துரை வழங்கியிருக்கும் மருத்துவர், மருத்துவ குழுவில் ஒரு உறுப்பினரா என்றால் இல்லை. மேற்படி புத்திசுவாதினம் மற்றும் போதிய அறிவு கண்ணன் அவர்களுக்கு இருக்கிறதா என்று பரிசோதித்த மருத்துவர் 10.05.2025 அன்று சோதனை செய்துள்ளார். கண்ணன் அவர்களுக்கு அறுவை சிகிச்சை தேவையா அல்லது மருந்து

வழியாகவே சரிசெய்யமுடியுமா என்றால் மருத்துவ ரீதியாக சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2026.06.02 18:48:47 +0530

Sub Judge

Melur